சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 23.03.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **32/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | முத்துலெட்சுமி |
| கணவர் பெயர் | : | கேசவன் |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| வயது | : | 45 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு வட்ட காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.02.2025-ம் தேதி திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த

போது கடந்த 15.02.2025-ம் தேதி செம்மங்குடி புதுத்தெருவை சேர்ந்த அழகேசன் மகன் சுந்தராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று உதவி ஆய்வாளர் அ.சா.8 திரு. சுப்ரமணியன் என்பவரால் பதிவு செய்யப்பட்டிருந்த மனு எண்.107/2025 -ஐ பார்வையிட்டு 16.02.2025-ம் தேதி காலை 11.00 மணியளவில் வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண்.50/2025 பிரிவு 296(பி), 131, 133, 351(3) BNS r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC & ST (PoA) Act -ன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து தஞ்சாவூர் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். மேலும், இவ்வழக்கானது வன்கொடுமை வழக்காக இருப்பதனால் புலன் விசாரணை அதிகாரியை நியமனம் செய்ய வேண்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்றினை அனுப்பியும் ஒரு நகலை நிலைய பொறுப்பில் வைத்தேன். இது சம்பந்தமாக நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக மனு ரசீது ஒப்புகை அ.சா.ஆ.3 பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அ.சா.ஆ.1 ஆன புகாரில் உள்ள அ.சா.1 சுந்தர்ராஜன் கையெழுத்திற்கும் அ.சா.ஆ.3 உள்ள சுந்தர்ராஜன் கையெழுத்திற்கும் வித்தியாசம் உண்டு என்றால் சரிதான். மேற்படி இந்த இரண்டு கையெழுத்துக்களையும் யார் செய்தார் என்பது சம்பந்தமாக விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. மனு ரசீது காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது. மனு ரசீது எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்றால் 15.02.2025 ஆகும். அ.சா.ஆ.3 ஆன மனு ரசீது 17.02.2025 அன்று மாலை 06.09 மணிக்கு பிரிண்ட்அவுட் எடுக்கப்பட்டதாக அந்த ஆணத்தில் குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ஆன புகாரை யார் எழுதினார்கள் என்பது தொடர்பாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இந்த புகார் சம்பந்தமாக நான்

யாரையும் புலன் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திலிருந்து தஞ்சாவூரில் உள்ள முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் செல்லவேண்டுமென்றால் அதிகபட்சமாக 1 மணி நேரத்திற்குள் சென்றுவிடலாம் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கையை நான் எப்பொழுது நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் நேரம் தெரியவில்லை ஆனால் அன்றைய தினமே அனுப்பி வைத்துவிட்டேன். நான் வழக்கு ஆவணங்களில் நான் விசாரணை செய்து வழக்கு பதிவுசெய்ததாக குறிப்பு ஏதும் செய்திருந்தால் அது சரியா, தவறா என்றால் தவறு. (சாட்சி தற்போது சரி என்கிறார்). நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் எனது காவல் நிலையத்தால் அ.சா.ஆ.1 புகார் பெறப்படவில்லை என்றும், பின்னிட்டு செம்மங்குடி ஊராட்சிமன்ற தலைவர் செந்தமிழ் செல்வியின் கணவர் முனுசாமி என்பவர் எதிரியை பழிவாங்கும்பொருட்டு எனக்கு அழுத்தம் அளித்து அதனடிப்படையில் கொடுக்கப்பட்ட பொய் புகாரினை முன்தேதியில் பெற்றதுபோல் பொய்யான குறிப்பும், பொய்யான ஒரு ஆவணமும் என்னால் தயார் செய்யப்பட்டு அதனடிப்படையில் எதிரிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, நான் செய்த தவறுகளை மறைத்து கொள்ளும் பொருட்டு உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்..

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.23 18:37:17 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.